**மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள வீதிகள் மற்றும் பாலங்களின் அகலப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் செயற்திட்டம் - 2020**

---

மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள வீதிகள் மற்றும் பாலங்களின் அகலப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. 64.31 கிலோமீற்றர்கள் நீளமான அதாவது RDA வீதிகளின் 62.06 கிலோமீற்றர்கள் மற்றும் மாகாண வீதிகளின் 2.25 கிலோமீற்றர்கள் நீளமான வீதிகளை அகலப்படுத்தி மேம்படுத்துதல் மற்றும் 13 பாலங்களை மீள்நிர்மாணம் செய்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,674.90 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியனானதுடன் அதில் ரூபா 10,774.74 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 85 மில்லியன் சீனா ஏற்றுமதி - இறக்குமதி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 1,900.16 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2018 நவம்பர் 29 இல் தொடங்கியிருந்ததுடன் 2020 நவம்பர் 28 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

எனது அறிக்கையின் அட்டவணை 2 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் வழங்கிய தகவலின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கடனுக்கான வட்டிகள் மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் முறையே ரூபா 78 மில்லியன் மற்றும் ரூபா 133 மில்லியன் ஆக காணப்பட்டது. எனினும், அந்த கட்டணங்கள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 211 | 2013 நவம்பர் 29 ஆம் திகதிய SA/MA/DO/Circular-2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கடன் வட்டிகள் மற்றும் கடனுக்கான கடப்பாட்டுக் கட்டணங்களை மூலதனமாக்குவதற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. | வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது திறைசேரியின் கூற்றுக்கள் மற்றும் செயற்திட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கடன் மீதிக்கு இடையே அவதானிக்கப்பட்ட வேறுபாட்டிற்கான கணக்கிணக்கம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 622 | கடன் பெறும் வரம்புக் கட்டுப்பாடுகளால் 2019 இல் பொது திறைசேரியால் கணக்கீடு செய்யப்படாத பணவளிப்பு இந்த ரூபா 622 மில்லியன் வேறுபாட்டிற்கு காரணமாகும். | இது தொடர்பாக கணக்காய்விற்கு கணக்கிணக்கம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றம்

செயற்திட்டத்தின் செயற்பாடுகள் வீதிப் பொதி மற்றும் பாலங்கள் பொதி என 02 பொதிகளைக் கொண்டிருந்தன. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி பொதி மற்றும் பாலங்க்ள பொதியின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 86 சதவீதம் மற்றும் 46 சதவீதம் ஆகும்.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 நவம்பர் 22 இல் நடைபெற்ற அமைச்சரவை நியமித்த பெறுகை குழுவின் பிரகாரம் செயற்திட்ட முன்மொழிபவரின் கிரயம் பொறியியலாளரின் மதிப்பீட்டை விட ரூபா 2,072.72 மில்லியன் தொகையால் அதிகமாக இருந்தது. எனினும், கிரய வேறுபாட்டைக் கருத்தில் கொள்ளாமல் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. | இது EXIM வங்கி (ஹுனான் கிளை) மூலம் நிதியளிக்கப்பட்ட கோரப்படாத செயற்திட்டமாகும். மதிப்பிடப்பட்ட கிரய முன்மொழிவு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அமைச்சரவை நியமித்த நிலையான பெறுகை குழுவுக்குப் | பொறியியலாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பரிந்துரைக்கப்பட்டது. SCAPC இன் அவதானிப்பு மற்றும் கருத்துரைகளுக்குப் பின்னர் இது அமைச்சரவைக்கு அனுப்பப்பட்டு, அந்த முன்மொழிவு மற்றும் மதிப்பிடப்பட்ட கிரயத்திற்கான அங்கீகாரம் பெறப்பட்டது. | |
| (ஆ) | 2014 யூலை 09 இல் உள்ளவாறான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரையின் பிரகாரம் தேறிய தற்போதைய பெறுமதி - (NPV) 4 வீதிப் பிரிவுகளின் எதிர்மறையாகவும், IRR 2 வீதிப் பிரிவுகள் மற்றும் பாலங்களின் எதிர்மறையாகவும் இருந்தது. எனினும், செயற்திட்ட மதிப்பீட்டு முடிவுகளை கருத்தில் கொள்ளாமல் அந்த வீதிப் பிரிவு மற்றும் பாலங்கள் அமுல்ப்படுத்தப்பட்டன. | -மேலே உள்ளவாறு- | வீதிப் பிரிவுகளைத் தெரிவுசெய்வதற்கு செயற்திட்ட மதிப்பீட்டு முடிவுகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். |